# கணினி சொன்ன கதைகள்
# விரிவாக்கப் பகுதி (EXTENSION AREA)

- மதிகண்ணன்

தன் முயற்சியில் சற்றும் மனம் தளராத பைஸ்மால்கசன் மீண்டும் மறுதொடக்க (ரீஸ்டார்ட்) பட்டனை அழுத்தி தன்னுடைய கணிணியை இயக்கினான். அவனுடைய கணிணியும் விபரங்கள் சொல்லி, எங்கே நுழைய எனக்கேட்டு, இதுவரையிலான கோளாறுகள் அனைத்தையும் தற்காலிகமாகச் சரிசெய்து 'டெஸ்க் டாப்' நிலைக்கு வந்தது. சற்று நேரம் எதுவும் செய்யாமல் அமர்ந்து கவனித்துக் கொண்டிருந்த பைஸ்மால்கசன் கணிணியின் சுட்டி(மௌஸ்)யைத் தொட்டதும் - பெரிய சிரிப்பொலியுடன் அந்த உருவம் திரையில் தோன்றியது. தோள்பட்டைக்கு மேலே கழுத்தில் தலை இருக்க வேண்டிய இடத்தில் தலை இல்லாமல் இரண்டு கைகளுடன், தோள்ப்பட்டையில் வளர்ந்த சதை காதுகளாகி வயிற்றுக்கு நேராகத் தொங்கும் தலையும் கொண்ட அந்த உருவத்தைப் பார்த்தவுடன் பைஸ்மால்கசனுக்கு எரிச்சல்தான் வந்தது. "எந்தனை முறைதான் இந்தத் தொந்தரவு. 'எங்ஸ்ட்வின்' என்ற இந்த வைரஸைச் சரி செய்ய முடியாதா?" என்ற கேள்வியுடன் காத்திருந்தான். சிரித்து முடித்த எங்ஸ்ட்வின் என்ற பெயர் கொண்ட அந்த செயற்கை அறிவு (ஏ.ஐ.) வைரஸ் "என்ன ஆயத்தமாகி விட்டாயா? சரி பார்க்கலாம். இந்தமுறையாவது நீ வெற்றிபெற என் வாழ்த்துக்கள்" என்று சொல்லி மறைந்ததும் கணிணியின் திரை கருப்பாக மாற திரையில் இளமஞ்சள் நிறத்தில் எழுத்துக்கள் தோன்றின.

முன்பொரு காலத்தில் கோடைகால மழைநாளில் ஒருநாள் மழையும் பெய்யாமல் வெயிலும் அடிக்காமல் இடிமட்டும் அவ்வப்போது இடித்து, காற்றும் திடீர் திடீரென வீசி எந்த நேரத்திலும் மழை வரலாம் என பயமுறுத்திக் கொண்டிருந்த ஒரு முற்பகல் நேரம். மின் பகிர்மானத்திற்காக நடப்பட்டிருந்த கம்பத்தில் அவனைக் கட்டி வைத்திருந்தார்கள். அவன் தலை குனிந்திருந்தது. கண்களில் கண்ணீர் அந்தக் கோடை மழையைப் போல எப்போதும் வரக்காத்திருந்தது. அவனது மூச்சு சீரற்று இருந்ததில் இருந்தே அவனுக்குள் வீசும் சூறாவளியை சுற்றி இருப்பவர்கள் உணர முடிந்தது. சுற்றி நின்ற ஆண்களும், பெண்களும் அவனை என்ன செய்வது என்பது பற்றி யோசித்துக் கொண்டிருந்தார்கள்.

"இவனை மாதிரி ஆட்களையெல்லாம் சும்மா விடக் கூடாது"

"அட விடுங்கப்பா ஏதோ தெரியாமச் செஞ்சுட்டான்"

"என்னய்யா தெரியாமச் செஞ்சுட்டான். கொஞ்சமாவது அறிவு வேணாம்"

"அட அந்தப் புள்ள ரொம்ப நல்ல புள்ளதாம்ப்பா. ஏதோ போதாதகாலம் தெரியாமப் பண்ணிப்புருச்சு. கண்டிச்சு அனுப்பி வையுங்கப்பா"

"என்ன ஆத்தா நீயும் புள்ளப் பெத்தவதானே? ஓம்புள்ள இப்புடி ஒரு காரியத்தச் செஞ்சா நீ என்ன செய்யுவ?"

"ஏம் புள்ள எதுக்குடா இப்புடியெல்லாம் நடந்துக்குருது. அது என்ன அக்குருமத்துக்கா புறந்துருக்கு?"

இப்போது அவனது கண்களில் இருந்த கண்ணீர் வெளியில் வந்தது. 'நான் செஞ்ச காரியத்துனால என் பொறப்பையும், என்னோட அப்பா அம்மாவையும்கூட தப்பாப் பேசுறாங்களே' என்ற வேதனை அவன் கண்களில் தெரிந்தது. அழுகைச் சத்தம் வெளியில் வராமல் இருக்க அவன் முயற்சி செய்து கொண்டிருந்தான்.

"நேரங்கெட்ட நேரத்துல அவெ எதுக்குப்பு கொல்லக் காட்டுக்குப் போனான்"

"என்னப்பு பேசுறிக. அவன் கொல்லக் காட்டுக்குப் போனதுல பிரச்சன இல்ல. அங்க போயி செஞ்ச காரியந்தா இப்ப சிக்கலாப் போச்சு"

"பேதியில போறவே... கொஞ்சமாவது கூறு இருக்கா... இப்புடிச் செய்யிறதுகளக் கூட்டிட்டுப் போயி பள்ளிவாசல்ல ஒட்டப் புடிக்கச் சொல்லணும்"

"யாருப்பா முதல்ல பாத்தது"

"ஆமா இந்தக் கன்றாவிய வரிசையில நின்னு முதல்ல, ரெண்டாவதுன்னு பாப்பாக. நம்ம வலுதூரு கோணாருதான் பாத்துட்டுக் கத்தியிருக்காரு"

"மத்த ஆளுகன்னாலும் 'த்தூ'ன்னு துப்பீட்டு வந்துருவாக. கோணாரு பாவம் கத்தாம என்ன பன்னுவாரு?"

"அட ஏம்பா வளவளன்னு பேசிக்கிட்டு. மூதேவிய நாலு சாத்து சாத்தி வெரட்டி விடுறத விட்டுட்டு கட்டிவைச்சு ஊர்ஞாயம் பேசிக்கிட்டு இருக்கீங்க"

இழுத்துப் பிடித்துக் கட்டி வைத்தாலும்கூட கை ஓங்கியதுடன் சரி, யாரும் அவனை ஒரு அடிகூட அடிக்கவில்லை. இப்போது அடித்து விரட்டிவிட ஆலோசனை சொன்ன ஐயப்பசாமியைப் பார்த்ததும் அவனுக்கு அவர்தான் கடவுள் என்பது போல் இருந்தது. ஆமாம் அவனுக்கும்கூட அவர் சொல்வதுபோல் செய்யவேண்டியதைச் செய்து சீக்கிரமே அந்த இடத்தை விட்டு அனுப்பினால் போதும் என்றிருந்தது. “அதற்குப் பிறகு இந்த ஊர்ப்பக்கமே தலைவைத்தும் படுக்கக்கூடாது” என்று நினைத்தான்.

சிலர் எதுவும் பேசவில்லை என்றாலும்கூட அவனை ஏளனமாகவும், ஆச்சரியமாகவும், பயத்துடனும் பார்த்துச் சென்றார்கள்.

“ஊருக்குள்ள நல்ல புள்ளயின்னு பேருவாங்குன பயல்ல. யாருக்கும் அடிக்க மனசு வரல போல. சரி இந்த வெவரம் அண்ணாச்சிக்கித் தெரியுமா? அவர எங்க? கடயில காணமே.”

“அண்ணாச்சி இவனக் கடயப் பாத்துக்குறச் சொல்லிட்டுச் சாப்புடப் போயிருக்காக. அதுக்குள்ளதான் பய கடக்கித் தடுப்பு வைச்சுட்டு இந்தச் சோளி பாத்துருக்கா. அண்ணாச்சிக்கிட்ட தாக்கல் சொல்லச் சொல்லி நம்ம பவுனு மவன சைக்கிளக் குடுத்து அனுப்பியிருக்கே. அண்ணாச்சி இப்ப வந்துருவாக”

அண்ணாச்சி வருவதற்குள் நாமும் சில விஷயங்களைத் தெரிந்து கொண்டால் நல்லது. பழைய இராமநாதபுரம் மாவட்டம் பிரிக்கப்பட்டபோது விருதுநகர் மாவட்டத்தில் மாட்டிக்கொண்ட நிறைய புதுப்பட்டிகளில் ஒரு புதுப்பட்டி து.புதுப்பட்டி என்ற துப்பனார்பாளையம் புதுப்பட்டி. சின்ன கிராமம். பக்கத்தில் சாத்தூர் நகராட்சி. அந்த ஊரில் படித்துவந்த ஏனாதிராஜனுக்கு ஒன்பதாம் வகுப்பு இறுதித் தேர்வுகள் நடந்து முடிந்திருந்தது. ஏனாதியின் அப்பா தனுஷ்கோடியும், மீள்ச்சாமியும் நிறைய சின்னச் சின்னக் கம்பெனி சரக்குகளுக்கு ஏஜென்சி எடுத்து பார்ட்னர்ஷிப்பாக வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். ஒருவருடமாகத்தான் இந்தத் தொழில். அதற்கு முன்னால் தனுஷ்கோடி ஒரு ஜவுளிக்கடையில கணக்கு எழுதுகிறேன் என்ற பேரில் எடுபிடியாக வேலைபார்த்துக் கொண்டிருந்தார். மீள்ச்சாமி முழுநேர ஊர்சுற்றியாக இருந்தான். அப்பா இல்லாத மீள்ச்சாமியோட சித்தப்பாதான் தனுஷ்கோடியைப் பார்த்துப்பேசி இப்படி ஒரு ஏற்பாட்டைச் செய்து வைத்தார். மீள்ச்சாமி துடிப்பான இளைஞன். அவனுடைய வேகமும் தனுஷ்கோடியின் நெளிவுசுழிவும் வியாபாரத்தை கொஞ்சம் கொஞ்சமாக முன்னேற்றிக் கொண்டிருந்தது. ‘அவனுக்குப் பெண்தரமாட்டேன்’ என்று கொஞ்சநாட்களுக்கு முன்னால் சண்டை போட்ட அவனுடைய சொந்த அத்தை மீள்ச்சாமியின் வளர்ச்சியைப் பார்த்து ஆறுமாதத்திற்கு முன்னர்தான் வலியவந்து எல்லாச் செலவையும் தானே செய்து வசந்தியைத் திருமணம் முடித்து வைத்தார்கள். பெரிய அளவில் வருமானம் இல்லையென்றாலும்கூட கையைக் கடிக்காத தொழில். கொஞ்சம் வசதியாக வாழ்வதற்கும்கூட அது போதுமானதாக இருந்தது.

எல்லாம் இப்படிச் சரியாகப் போய்க்கொண்டிருந்த அந்த சித்திரை மாதத்தில் ஒருநாள் காலையில் ஏனாதியின் அம்மாவும், அப்பாவும் படுக்கையில் இருந்து எழுந்திருக்கவில்லை. மகனை நடுவில் படுக்க வைத்து ஆளுக்கொரு பக்கமாகப் படுத்திருந்த அவர்கள் காலையில் பிணங்களாகியிருந்தார்கள். இயற்கையான மரணமா? தற்கொலையா? கொலையா? எதுவும் யாருக்கும் தெரியவில்லை. போலீசுக்குச் சொன்னால் பிணங்களை அறுத்துவிடுவார்கள். காரியக்காரர் ஊர்கூட்டத்தை அவரசரமாகக் கூட்டினார். “யாரும் எதுவும் பேசக்கூடாது. தற்செயலா? அவசியமா? அப்படீன்னெல்லாம் தர்க்கம் பன்றதுக்கு இது ஒன்னும் விளையாட்டுச் சமாச்சாரமில்ல. புள்ளத்தாச்சியத்தே அறுத்துப் போடணும். மத்தபடி செத்தவுகள அறுத்துப் போட்டா அவுக ஆத்மா சாந்தியடையாது. ஆகுற வேலையப்பாருங்க” என்ற காரியக்காரரின் முன்வைப்புக்குப் பின் யாரும் எதுவும் பேசமுடியாததால் ‘இது இயற்கையான மரணம்’ என ஏகமனதாக ஏகப்பட்டவர்கள் சேர்ந்து முடிவு செய்து, ஊர்ச்செலவில் எரித்துவிட்டார்கள். ஏனாதி தனி ஆளானான். தனுஷ்கோடி எப்படிச் செத்தார் என்பது மனத்திற்குள் எல்லோருக்குமே குழப்பமாக இருந்ததால் மீள்ச்சாமியிடம் பேசுவதற்கு பலரும் ஏனோ பயந்தார்கள்.

மீள்ச்சாமிக்குத்தான் என்ன செய்வது என்றே தெரியவில்லை. வியாபாரத்தை நிறுத்தினான். காரியக்காரரை வைத்து கணக்கு வழக்குப் பார்த்தான். வந்த தொகையை இரண்டாகப் பிரிந்து அதில் ஒரு பங்கை ஏனாதியின் பேரில் உள்ளூர் வங்கியில் பனிரெண்டு ஆண்டுகளுக்கு வைப்பு நிதியாக்கினான். இழப்பைச் சகித்துக் கொண்டாலும் பேசத் தயங்குகின்றவர்கள் இருக்கிற ஊரில் என்ன செய்யமுடியும். வெளியூர் யோய் பிழைப்பைப் பார்க்கலாம் என முடிவு செய்தான். ஏனாதி “அண்ணாச்சி என்னயும் உங்ககூட கூட்டிட்டுப் போறிகளா?” என்றபோது, மீள்ச்சாமி ஏனாதியைக் கட்டிக் கொண்டு, அழுதான். “ஊரே என்னயச் சந்தேகமாப் பாக்கும்போது, நீ ஒருத்தனாவது என்னயப் புரிஞ்சுக்கிட்டயே ராசா. என்னைய ஒரு யாபாரியா ஆக்குனது ஒங்க அப்பாதாம்லே. நானு ஒன்னய எப்பாடுபட்டாவது பெரிய ஆளா ஆக்குவே. ஏங்கூட வாலே.” என்று உச்சி மோந்து உடன் அழைத்துக் கொண்டான்.

து.புதுப்பட்டியில் இருந்து புறப்பட்ட ஏனாதியும் மீள்ச்சாமியும் அவன் மனைவி வசந்தியும் ராமநாதபுரத்தில் நாலு கிலோ மீட்டர் தள்ளி கலெக்டர் ஆபீஸ் கட்டியதால் ஊராக மாறிக்கொண்டிருக்கிற பாரதிநகர்

என்கிற விரிவாக்கப் பகுதிக்கு வந்து சேர்ந்தார்கள். ஒரு ஓட்டு வீட்டை வாடகைக்கு எடுத்து குடியிருந்தார்கள். காரைவீட்டுப் பகுதியில் ஒரு கடையைப் பிடித்து தன் கையிலிருந்த பணத்தைப் போட்டு சின்னதாக ஒரு பலசரக்குக் கடையைத் தொடங்கினான் மீள்ச்சாமி. பத்தாவது வரையாவது படிக்கச் சொன்ன மீள்ச்சாமியிடம் தான் வியாபாரம் கற்றுக்கொண்டால் போதும் என்று சொல்லி கடையில் கூடவே இருந்துவிட்டான் ஏனாதி. “அண்ணாச்சி தேங்காய நட்டமா வைக்கிறதுன்னா குடுமி மேல இருக்குற மாதுரிதானே?” “அண்ணாச்சி வெங்காயத்தச் தேச்சுப் பொடச்சு வைக்கவா?” ஏனாதி மீள்ச்சாமியிடம் பேசும்போது எல்லா வாக்கியங்களிலும் அண்ணாச்சி சேர்த்தே அழைப்பதைக் கேட்ட பாரதிநகர் நடுத்தர வர்க்கம் ‘அண்ணாச்சி’ என்று மீள்ச்சாமியை அடையாளம் கண்டுகொண்டது. அதன்பிறகு மீள்ச்சாமிக்கும்கூட கையெழுத்திடும் நேரம் தவிர மற்ற நேரங்களில் தன்பெயர் மறந்து போயிருந்தது. வசந்தியும் யாரிடமாவது அறிமுகப்படுத்திக் கொள்ள வேண்டிதாகயிருக்கும்போது “நான் அண்ணாச்சியோட சம்சாரம்” என்று சொல்லிக் கொண்டார். அண்ணாச்சி அந்தப் பகுதியில் தொழில் நுணுக்கம் தெரிந்த ஆள் என்று பெயர் பெற்றுவிட்டார்.

இப்படியே ஏழு வருடங்கள் ஓடிவிட்டன. இப்போது ஏனாதிக்கு நன்றாக மீசை வளர்ந்துவிட்டது. அவனுடைய மாநிற உடம்பிற்கு அந்தக் கருப்பு மீசை ரொம்பவும் எடுப்பாகவே தெரிந்தது. இன்னும் ஐந்து வருடத்தில் ஏனாதி பெயரில் வங்கியில் போட்டிருக்கும் பணம் நாலு மடங்காகப் பெருகியிருக்கும். அண்ணாச்சியும் அவர் பங்குக்கு கொஞ்சம் பணத்தைப் போட்டு து.புதுப்பட்டியில் ஏனாதிக்குக் கடைவைத்துக் கொடுத்து, அவனுக்கு ஒரு திருமணம் முடித்துவைப்பதாகத் திட்டமிட்டிருந்தார். இப்படிச் செய்வதன் மூலமாக தன்மீது அந்த ஊர்க்காரர்கள் கொண்டிருக்கும் வெளியில் சொல்ல முடியாத அவநம்பிக்கையைப் போக்க நினைத்தாரோ என்னவோ? குழந்தை இல்லாத அண்ணாச்சியும் ஏனாதியை தன் சொந்தப் பையனைப் போல் பார்த்துக் கொண்டார். கேட்கின்ற எல்லோரிடமுமே ஏனாதியை தன் சொந்தத் தம்பி என்றே சொல்லி வைத்தார். வசந்தி அவனை ஏனாதி என்றழைத்தாலும் அண்ணாச்சி அவனை ராசா என்றுதான் அழைத்தார். அவனை இதுவரை அவர் ஒரு கடுஞ்சொல்கூடக் கூறியதில்லை. அவனும் அப்படி நடந்து கொண்டதில்லை. எல்லோரையும் சிரித்த முகத்துடன் எதிர்கொள்ளக்கூடிய ஒரு தேர்ந்த வியாபாரிக்கான பேச்சு வழக்கு தெரிந்தவனாயிருந்தான் ஏனாதி. “அண்ணாச்சி வளர்ப்புன்னா சும்மாவா. சின்ன அண்ணாச்சி.” என்று பலரும் இவர்களின் காதுபடவே பேசிக் கொண்டார்கள்.

அந்த அண்ணாச்சி வளர்ப்பான ‘சின்ன அண்ணாச்சி’ ராசா என்கிற ஏனாதிதான் இப்போது கட்டுக்குள் இருக்கும் அந்தப் பையன். அண்ணாச்சிக்குத் தகவல் சொல்லச் சென்ற ஆள் வந்து சேர்வதற்கு முன்னால் அண்ணாச்சி சைக்கிளில் வந்து சேர்ந்துவிட்டார். ஏறிவந்த சைக்கிளை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்த அவர் ஏனாதியை அடிக்கத் தொடங்கினார். சுற்றி நிற்பவர்களுக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை. நான்கைந்து அடி அடிப்பதற்குள் கை வலித்துவிட்டதோ என்னவோ, சுற்றும் முற்றும் பார்த்து பக்கத்தில் கிடந்த ஒரு சுள்ளியை எடுத்து அடித்தார். அதற்குள் கூட்டத்திற்குள் இருப்பவர்கள் அவரைப் பிடித்து இழுத்துக் கொண்டார்கள். அண்ணாச்சியை அவர்கள் ‘சரி விடுங்க... நடந்தது நடந்து போச்சு... பேசாம காலாகாலத்துல ஆக வேண்டியதப் பாருங்க...’ எனப் பலவாறு சமாதானப்படுத்தத் தொடங்கினார்கள். அண்ணாச்சி சத்தமாகப் புலம்பினார் “அவனுக்கு நானு என்ன கொற வைச்சே. என்னயுஞ் சேத்து இப்புடிக் கேவலப்படுத்திப்புட்டானே. நெத்தம் காலையில பதினோரு மணிக்கு நாஞ் சாப்புடப் போனப்பயெல்லாம் இந்தச் சோளிதான் பாத்துருக்காம்போல. கொள்ளப்பேரு கடையில ஆளு இல்லையிண்டு ஏங்கிட்டக் கேட்டிருக்காவ. என்னடான்டு நாங் கேட்டதுக்கு ஒன்னுக்குப் போனமுன்டு சொல்லி என்னய ஏச்சுருக்கானய்யா. நானு என்னத்தப் பண்ணட்டும். யாபாரம் செய்யிற எடத்துல எப்புடி நடந்துக்கணுமுன்டு தெரியாத இதெயெல்லாம் நானு என்னத்தச் செய்ய”

அண்ணாச்சி புலம்பிக் கொண்டிருக்கும்போதே சிலர் ஏனாதியின் கட்டை அவிழ்த்து விட்டிருந்தார்கள். அந்தக் கூட்டத்தை விட்டு ஓடிவிடவேண்டும் போல் இருந்தது அவனுக்கு. ஆனால், நிமிர்ந்து பார்க்கத் திராணி இல்லை. அப்படியே குத்துக்கால் வைத்து அமர்ந்து லேசாக மின்கம்பத்தில் முதுகை முட்டுக் கொடுத்து தலைகுனிந்தபடி தேம்பிக் கொண்டிருந்தான். மீண்டும் அடிக்க வந்து விடுவாரோ என்கிற பயத்தில இடையிடையே அண்ணாச்சியை லேசாக விழிதூக்கிப் பார்த்துக் கொண்டான். இதற்குள் அண்ணாச்சியின் மனைவி வசந்தியும் அங்கு வந்துவிட்டார். இவனது இந்தச் செயல்களைக் கண்ட அண்ணாச்சிக்கு கோபம் இன்னும் அதிகமானது. “செய்றதுயுஞ் செஞ்சுபுட்டு எவ்வளவு தெனாவட்டா உக்காந்திருக்காம் பாரு” என்றபடி கூட்டத்திலிருந்து திமிறி பக்கத்தில் இருந்த விறகுக் கட்டையயில் ஒன்றை எடுத்துக் கொண்டு ஏனாதியை நோக்கிப் பாய்ந்தார். ஆட்கள் பிடிக்க திமிறியபடி விறகுக்கட்டையை ஏனாதியை நோக்கி எறிந்தார். விறகு எறிக்குத் தப்புவதற்காக சடாரென எழுந்த ஏனாதி மின்கம்பத்தின் பின்னால் நின்று கொண்டான். மீண்டும் பிடியிலிருந்து தப்பி தன்னை நோக்கி ஓடிவந்த அண்ணாச்சியைப் பார்த்து கண்களைத் துடைத்தபடியே கோபமாகவும் சத்தமாகவும் “யோவ். நில்லுய்யா. பெரிய இவெ மாதிரி என்னய அடிக்கப் பாயுறாரு. எல்லாத்துக்கும் காரணம் நீதாய்யா.” அண்ணாச்சி அசைவற்றுப் போனார். கேளாத வார்த்தைகள். கேட்கத் துணியாத அதிகார ஒலி. “ஒரு நாளாவது வீட்டுல ஒரு வயசுப்பய

இருக்கான்னு நெனச்சிருக்கயாய்யா. பக்கத்துல நான் படுத்திருக்குறப்பயே நானு தூங்கிட்டனா என்னன்னுகூடத் தெரிஞ்சுக்காம ஓம் பொண்டாட்டிக்கிட்ட நீ எப்புடியெல்லாம் நடந்துக்கிட்ட. மறுநாளு அவுக மூஞ்சியில நானு எப்புடி முழிக்கிறதுன்னு நீ யோசிச்சுப் பாத்துருக்கயா. நானு சினுமாவுக்குப் போறேன்னாக்கூட காலங்கெட்டுக் கெடக்கு ஒத்தயில போகாதயின்றது. கடையிலயே படுத்துக்குறேன்னா. அசந்து தூங்கிருவ. களவு போயிருமுன்றது. ஒருநாளா ரெண்டுநாளா ஏழுவருஷம் இதச்சகிச்சிக்கிட்டு இருந்திருக்கேய்யா. நானும் மனுஷந்தானே. நீ அதக்கொஞ்சமாவது நெனச்சுப் பாத்தியா. நீ இப்புடியெல்லாம் நடந்துக்கிட்டதாலதாய்யா நானு கட்டிக் கெடக்குற மாட்டப் புடிச்சு ஏறவேண்டியதாப் போச்சு. பெருசாப் பேச வந்துட்டாரு. இனிமே ஒரு அடி எடுத்து வச்சு மருவாத கெட்டுப் போயிரும்" என்றபடி அடிபட்ட இடங்களைத் தேய்த்து விட்டுக் கொண்டே, திரும்பித் திரும்பிப் பார்த்தபடி சென்றுகொண்டிருந்தான் ஏனாதி. அதற்கு இரண்டு நாட்களுக்குப் பிறகு அண்ணாச்சியும் பாரதிநகரைக் காலி செய்திருந்தார்.

'இந்தக் கதையின்படி தனிமனிதர்களின் ஒழுக்கத்தை சமூக ஒழுங்கு தீர்மானிக்கிறதா? அல்லது சமூக ஒழுங்கை தனிமனிதர்களின் ஒழுக்கம் தீர்மானிக்கிறதா? சுற்றுப்புற ஒழுங்கிற்கும் தனிமனித ஒழுக்கத்திற்கும் என்ன மாதிரியான உறவு இருக்கிறது? இங்கே அண்ணாச்சியும், வசந்தியும், ஏனாதிராஜனும் இருப்பவர்களா? இல்லாதவர்களா?' இந்தக் கேள்விகளுக்கான விடைகளை பத்து நொடிகளுக்குள் நீ சொல்லத் தொடங்கவில்லை எனில்...

பைஸ்மால்கசன் விரைவாகச் சிந்திந்து எங்கிருந்து தொடங்குவது என முடிவு எடுத்துக் கொண்டிருக்கையில் எங்ஸ்ட்வின் செயற்கை அறிவு வைரஸின் கௌண்ட் டவுன் தொடங்கியது.

10... 9... 8... 7... 6... 5... 4... 3... 2... 1...

விடையைக் கண்டுபிடித்துத் டைப் செய்யத் தொடங்குமுன்னரே...

மீண்டும் எங்ஸ்ட்வின் செயற்கை அறிவு வைரஸின் அந்த உருவம் திரையில் தெரிய தோளில் தொங்கிய தலை 'குட் பை' சொல்ல... கணிணியின் திரை மும்முறை ஒளிர்ந்து கணிணி செயல்பாடற்றுப் போனது.

11042008

**மதிகண்ணன்**
**5-29-18, பாரதி நகர்**
**மின்வாரியக் குடியிருப்புகள் (கிழக்கு)**
**அருப்புக்கோட்டை - 626 101**
**செல்லிடப் பேசி : 94431 84050**
**(நன்றி : மணல்வீடு இதழ் 1 - மே 2008)**